**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.166/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சீனிவாசன் | த–பெ | குழந்தையன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வியாபாரம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026**

----------------------------------------------------------------------------------------------------

**22.06.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 01.06.2025 ம் தேதியிட்ட எதிரி புகார்தாரருக்கு கொடுத்த இந்தியன் ஓவர்சீஸ் **வங்கி காரைக்குடி கிளை காசோலை (காசோலை எண்933561) அசல் ம.சா.ஆ.1** ஆகும். கடந்த 04.06.2025 ம் தேதியிட்ட ம.சா.ஆ.1 காசோலை போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு திருப்பப்பட்ட **ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 14.06.2025 ல் புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய **வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ.3** ஆகும். கடந்த 17.06.2025 அன்று எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலக உறை **அசல் ம.சா.ஆ 4 ஆகும்.** கடந்த 17.06.2025 அன்று எதிரியின் அலுவலக முகவரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட **அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ 5 ஆகும்.** எதிரியின் **ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.6 ஆகும்.** எதிரியின்

**வாக்காளர் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகும்**. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.06 16:55:21 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.